## RECORD OF DEPOSITION OF WITNESS

## IN THE COURT OF DISTRICT MUNSIF UTHANGARAI
## KRISHNAGIRI DISTRICT

| | | | | | |
|---|---|---|---|---|---|
| **Case No.** | : | O.S.No. 22/2023 | **CNR No.** | : | TNKI13-000018-2023 |
| **Name** | : | கணபதி | **Father's Name** | : | ராஜப்பன் |
| **Witness for** | : | Plaintiff | **Calling** | : | PW1 |
| **Age** | : | 51 | **Village** | : | செட்டிப்பட்டி |
| **Taluk** | : | ஊத்தங்கரை | **District** | : | கிருஷ்ணகிரி |
| **Start Time** | : | 11:25 AM | **End Time** | : | 12:15 PM |

Solemnly affirmed in accordance with the provisions of the Oaths Act, 1969 (Central Act 44 of 1969) on 03.12.2024 administered by Thiru. G. Amar Anand, B.A.LL.B (Hons), LL.M, District Munsif, Uthangarai.

**<u>பிரதிவாதிகள் தரப்பு குறுக்கு விசாரணை தொடர்ச்சி:</u>**

(1) இன்றை தேதியில் வழக்கு சொத்தின் உரிமையாளர் யார் என்றால் நான் தான். இன்றைய தேதியில் வழக்கு சொத்து யாருடைய சுவாதீனத்தில் உள்ளது என்றால் என்னுடைய சுவாதீனத்தில் தான் உள்ளது. இந்திராகாந்தி யார் என்றால் எனது மனைவி ஆவார். கடந்த **24.05.2024ம்** தேதி தானசெட்டில்மென்ட் **பத்திர எண் 2512/2024** ஆவணத்தை எனது மனைவி பெயரில் வழக்கு சொத்தை தானம் எழுதி கொடுத்துள்ளேன் என்றால் சரிதான். வழக்கு சொத்தை எனது மனைவி பெயரில் எழுதிக்கொடுத்த தானபத்திரத்தின் விவரத்தை **03.10.2024ம்** தேதி தாக்கல் செய்த முதல் விசாரனை பிரமாணபத்திரத்தில் சொல்லியுள்ளேனா என்றால் இல்லை. நான் வழக்கு சொத்தை தானம் கொடுத்துவிட்டதால் தற்போது வழக்கு சொத்தின் உரிமையாளர் நான் இல்லை என்றும் அதனால் சுவாதீனத்தில் இருப்பதாக நிரந்தர தடை உறுத்துக்கட்டளை பரிகாரம் கோர அறுகதை அற்றவர் என்றால் சரியல்ல.

(2) மேற்படி தானசெட்டில்மென்ட் பத்திரத்தில் எனக்கு வழக்கு சொத்தானது **05.02.1996** தேதியிட்ட கிரைய பத்திரம் **ஆவண எண். 91/1996** பத்திரப்படி பாத்தியப்பட்டது என்று தான் சொல்லியுள்ளோ என்றால் ஆமாம். **வா.சா.ஆ.9** ல் கிரைய பத்திரப்படி எனக்கு 2 ஏக்கர் தான் பாத்தியம் என்றும் அதற்கு கூடுதலாக எனக்கு எவ்வித பாத்தியமும் இல்லை என்றால் சரியல்ல. என்னிடம் காட்டப்படும் ஆவணமானது நான் எனது மனைவி பெயரில் எழுதி வைத்த மேற்சொன்ன தானசெட்டில்மென்ட் பத்திரத்தின் நகல் என்றால் சரிதான். (**24.05.2024 தேதியிட்ட தானசெட்டில்மென்ட் பத்திரம் ஆவண எண்.2512/2024 – பதிவிறக்கம் செய்யப்பட்ட பதிவு நகல் – பி.வா.சா.ஆ.1 ஆக குறியீடு செய்யப்படுகிறது)**

(3) எனது மகள் சோபியா சார்பதிவளாராக வேலைப் பார்த்து வருகிறார்கள் என்றால் சரிதான், பாலக்கோடில் பணிபுரிந்து வருகிறார், 5 வருடங்களாக பதிவு துறையில் உள்ளார். பாலக்கோட்டை சேர்ந்த ஒருவரை வைத்து எனது பாத்தியத்திற்கு அதிகம் உள்ள சொத்திற்கான அளவிற்கு நான் மோசடியாக பத்திர பதிவு செய்துள்ளேன் என்றால் சரியல்ல.

(4) 3ம் பிரதிவாதி தனது சிட்டாவில் அவருடைய சொத்துக்கள் அளவுகள் சரியாக உள்ளது என்றும் புல வரைபடத்தில் அளவுகள் தவறாக உள்ளது என்றும் வருவாய் துறையிடம் மனு செய்து அந்த மனுவின் பெயரில் நிலத்தை அளவை செய்தார்களா என்றால் ஆமாம், அவ்வாறு அளவை செய்யும் பொழுது நான் அங்கு இருந்தேனா என்றால் இருந்தேன். கிருஷ்ணகிரி வருவாய் கோட்டாட்சியர் முன்பு மேற்படி விசாரணையில் நான் ஆஜரான போது மேற்படி விவரங்களை சொன்னார்களா என்றால்

நான் புறம்போக்கு நிலத்தை ஓட்டுவதாக தான் புகார் அளிக்கப்பட்டிருப்பதாகவும் எனது அனுபவித்தில் உள்ளது புறம்போக்கு நிலம் இல்லை என்று சொன்னார். மேற்படி வருவாய் துறை விசாரணையில் இறுதி தீர்ப்பு வழங்குவதற்கு முன்பு இந்த வழக்கை தாக்கல் செய்துள்ளேன் என்றால் சரியல்ல. எனது வழக்குரையில் மேற்படி வருவாய் துறை விசாரணையில் நான் சொல்லவில்லை என்றால் சரிதான், அவசியம் இல்லை. நான் மேற்படி வருவாய் துறை விசாரணையை மறைத்து அதனை இழுத்தடிப்பதற்காக இந்த வழக்கை தாக்கல் செய்துள்ளேன் என்றால் சரியல்ல.

(5) சர்வே எண்.296/2ஏ புல வரைபடத்தில் 2.63 ஏக்கர் என்பதற்கு பதிலாக 2.85 ஏக்கர் என்று அளவுகள் தவறாக குறிப்பிடப்பட்டுள்ளது என்றால் சரியல்ல, அளவுகள் குறிப்பிடவில்லை. மேற்படி தவறான அளவுகளை வைத்துக்கொண்டு 1ம் பிரதிவாதிக்கு பாத்தியப்பட்ட **1 ஏக்கர் 70 சென்ட்** நிலத்தை தென்வடல் மேற்குபுறம் 57.8 மீட்டர் கிழபுறம் 53.6 மீட்டர், கிழமேல் வடபுறம் 13.4 மீட்டர், தெற்புறம் 40 மீட்டர் அளவு கொண்ட 600 ச.மீ பரப்பளவு கொண்ட நிலத்தில் நான் பொய்யாக பாத்தியம் கொண்டாடி வருகிறேன் என்றால் சரியல்ல, 30 வருடமாக எங்கள் அனுபவத்திலும் புல வரைபடத்திலும் உள்ளது. 2 ஏக்கர் கிரையம் பெற்றுவிட்டு, 2 ஏக்கர் 63 சென்டிற்கு சிட்டா பெற்றுவிட்டு, 2 ஏக்கர் 85 சென்டிற்கு புல வரைபடம் வைத்துக்கொண்டு பொய் பாத்தியம் கொண்டாடி பிரதிவாதி நிலத்தை அபகரிக்க முயன்று வருகிறேன் என்றால் சரியல்ல.

(6) **சர்வே எண்.296/2ஏ1** என்ற 1ம் பிரதிவாதி கிரையம் பெற்ற சொத்தின் **1 ஏக்கர் 70** சென்டிற்கான புல வரைடம் தவறாக குறிப்பிடப்பட்டுள்ளது என்றால் சரியல்ல. 23.11.2021 தேதியில் நான் கிருஷ்ணகிரி வருவாய் துறை கோட்டாட்சியரிடம் கொடுத்த வாக்குமூலம் என்றால் சரிதான். மேற்படி வாக்குமூலத்தில் பத்திரப்படி நான் 2 ஏக்கர் கிரையம் வாங்கினேன் என்றும் 1ம் பிரதிவாதி 1 ஏக்கர் 70 செண்ட் கிரையம் பெற்றுள்ளார் என்றால் சரிதான். மேற்படி வாக்குமூலத்தில் புல அளவுகளில் 3 வார காலத்திற்குள் பரப்பளவு மாறுதல் இருந்தால் வருவாய் துறை கோட்டாட்சியர் உத்தரவுக்கு கட்டுப்படுவேன் என்று சொல்லியுள்ளேனா என்றால் சொல்லியுள்ளேன், ஆனால் 63 செண்ட்டை பொறுத்து சொன்னேன். என்னிடம் காட்டப்படும் வாக்குமூலத்தில் 63 செண்ட் பற்றி எதுவும் இல்லை என்றால் சரிதான். **(23.11.2022 தேதியிட்ட வருவாய் கோட்டாட்சியர் கிருஷ்ணகிரி அவர்கள் முன்பு அளித்த வாக்குமூலம் – சான்றிட்ட நகல் – பி.வா.சா.ஆ.2 ஆக குறியீடு செய்யப்படுகிறது)** நான் வாக்குமூலம் கொடுத்த பிறகு சர்வேயர் வந்து அளந்தாரா என்றால் அளந்தார். வருவாய் துறை விசாரணை நிலுவையில் இருந்த சமயத்தில் இந்த வழக்கை தாக்கல் செய்துள்ளேன் என்றால் சரிதான். வருவாய் துறை விசாரணையில் கொடுத்த வாக்குமூலத்தை மறைத்து இந்த வழக்கை தாக்கல் செய்து பொய்யாக நடத்தி வருகிறேன் என்றால் சரியல்ல.

(7) சர்வேயர் வந்து அளந்த பிறகு புல வரைபடத்தில் அளவுகள் தவறாக உள்ளது என்று அறிக்கை தாக்கல் செய்த பிறகு அதனை தடுக்க வேண்டும் என்று நான் பொய்யாக இந்த வழக்கை தாக்கல் செய்துள்ளேன் என்றால் சரியல்ல. தமிழ்நாடு பட்டா பாஸ் புக் சட்டம் மற்றும் Survey and

Boundaries Act படி வருவாய் துறை தான் திருத்தம் செய்ய உத்தரவிட வேண்டும் என்று அதனை தடுக்க பொய்யாக வழக்கு தாக்கல் செய்துள்ளேன் என்றால் சரியல்ல. **சர்வே எண்.296/2 ஏ** நான் கிரையம் பெற்ற 2 ஏக்கர் போக மீதம் உள்ள 63 சென்ட் ஏரி புறம்போக்கு என்றும் அதில் தண்ணீர் தான் உள்ளது என்றால் உள்ளது, 63 சென்ட் மற்றும் 20 ஏக்கரிலும் தண்ணீர் தான் உள்ளது. ஏரியின் மொத்த பரப்பளவு தெரியுமா என்றால் தெரியாது.

(8) மழைக்காலங்களில் மழை பெய்யும் பொழுது மேற்படி ஏரி புறம்போக்கில் தண்ணீர் நிற்கும் என்றும் அதனை மறைத்து இந்த வழக்கை தாக்கல் செய்துள்ளேன் என்றால் சரியல்ல. நான் கிரைய பத்திரம் 2 ஏக்கர் மட்டும் தான் அனுபவித்து வந்தேன் என்றும் இந்த வழக்கை தாக்கல் செய்து நிலுவையில் இருக்கும் பொழுது எனது மனைவி பெயரில் ஏரி புறம்போக்கை சேர்த்து 2. ஏக்கர் 63 சென்ட் என தானபத்திரம் ஏற்படுத்தி நடத்தியதால் வழக்கு தள்ளுபடி செய்ய வேண்டும் என்று சொன்னால் சரியல்ல. பொய்யாக வழக்கை நடத்தி வருவதால் பிரதிவாதிகளுக்கு நஷ்ட ஈடு தொகை மற்றும் செலவு தொகையை கொடுக்க கடமைப்பட்டவர் என்றால் சரியல்ல.

(9) குறுக்கு விசாரணை முடிவுற்றது.

Taken down by me in open Court, read over to the witness and acknowledged by him / her to be correct.

sd/-xxx

District Munsif
Uthangarai